நாள் 08.08.2024

அசல் வழக்கு எண் 38/2018

வா சா 1 கதிரவன்

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

வழக்கு சொத்து ஆதியில் ஏசையா மற்றும் சுடலை ஆகியோருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். இருவரும் 13.07.1953 மற்றும் 27.05.1954 ல் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்து என்று சொன்னால் சரிதான். ஏசையாவின் வாரிசுகள் யார் யார் என்றால் ராசையா, லாசர், கனகபுஷ்பம், கமலம் ஆகியோர் கமலம் என்னுடைய அத்தை அவர்கள் இறந்துவிட்டார்கள். எனது தகப்பனாரின் பெயர்என்ன என்றால் ராசையா. வழக்கில் உள்ள பிரதிவாதி எனது தகப்பனாரின் உடன்பிறந்த சகோதரர் என்றால் சரிதான். லாசரின் பெயர் லாசர் என்ற லெட்சுமண் என்று சொன்னால் இல்லை. லாசர் மட்டும்தான். பிராது தயார் செய்வதற்கு யார் தகவல் சொன்னார்கள் என்றால் நான் தான் சொன்னேன். நான் தான் எனது சித்தப்பாவின் பெயரை லாசர் என்ற லெட்சுமண் என்று கொடுத்தேன் என்றால் நான் கொடுக்கவில்லை. எனது தகப்பனார் இறந்துவிட்டார் என்றால்சரிதான். 1996 லியே இறந்துவிட்டார். எனது தகப்பனாரின் வாரிசுகள் யார் யார் என்றால் நான், எனது அம்மா பூரணம், எனது தம்பிகள் கண்ணன் மற்றும் இசக்கிமுத்து, எனது அக்கா கனகமணி ஆகும். நான் தான் இந்த வழக்கை எனது சித்தப்பா மீது தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் நான தாக்கல் செய்யவில்லை. அவர்கள் தான் என் மீது வழக்கு போட்டு இருக்கிறார்கள். வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்று சொன்னால் சில விவரங்கள் தவறு.. சில விவரங்கள் சரியானது. வழக்கு சொத்தை பொறுத்து நான்குநேரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.80/2000 பாகபிரிவினை வழக்கு நடைபெறுகிறது என்றால முதலில் வள்ளியூரில் 2016 ல் போட்டார்கள். லாசர் வழக்கு சொத்துக்கள் அனைத்தையும் சேர்த்து தான் வழக்கு போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். ஏசையா சொத்தில் தான் 3 ல் 1 பாகம் பங்கு கேட்டுஇருக்கிறார்கள். சாட்சி மறுபடியும் வழக்கு சொத்தில் இல்லை என்று கூறினார். ஏற்கனவே 1953 மற்றும் 1954 கிரைய பத்திரங்களில் கண்ட சுடலை என்பவருக்கும் வாரிசுகள் உண்டு என்று சொன்னால் வாரிசுகள் உண்டுசொல்கிறார்கள் அவர்களை எனக்கு

தெரியவில்லை. சுடலை ஆதிதிராவிடரின் மகன் தங்கராஜ் தான் அசல் வழக்கு எண்.80/20 ல் முதல் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுளளார் என்று சொன்னால் அது எனக்கு தெரியவில்லை. சுடலையையோ அல்லது சுடலையின் வாரிசுகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தங்கராஜ் எங்கு குடியிருந்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். தங்கராஜின் பாக சொத்துக்கள் தகப்பனாரின் காலத்திற்கு பிறகு தங்கராஜீக்கு வந்து தங்கராஜ் பெயரில் கூட்டுப்பட்டா உள்ள விவரம்எனக்கு தெரியுமா என்றால் அவர் அனுபவிக்கவில்லை. எனது அப்பா மட்டும் தான் அனுபவித்து வந்தார்கள். இன்றளவும் சுடலை பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் தங்கராஜ் மற்றும் ராசையா பெயரில் கூட்டுப்பட்டாவாக தான் பட்டா இருக்கிறது. பாகபிரிவினையினை ஒரு பகுதி சொத்து என்று தான் நான் இந்த வழக்கை தாக்க்ல செய்துள்ளேன் என்றால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை சித்தப்பா லாசர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் எந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் இந்த வழக்கை நான் தான் தாக்கல் செய்தேன். நான் ஒரு மாதத்திற்கு முன்பு பாகபிரிவினை வழக்கிலும் சாடசியம் அளித்துளளேன் என்றால் சரிதான். இந்த வழக்கை மோசடியாக ஒரு ஏற்பாடு ஆவணம் நான் ஏற்படுத்தியுள்ளேன் என்று சொன்னால் அப்பா பெயரில் உள்ளதை வாரிசு அடிப்படையில் எங்கள் பெயருக்கு மாற்றியுள்ளோம். எனது அப்பா பெயரிலும் சித்தப்பா பெயரிலும் தங்கராஜ் பெயரிலும் கூட்டாக உள்ள சொத்திற்கு ஏற்கனவே பாகபிரிவினை வழக்கு உள்ள நிலையில் அந்த சொத்தை பொறுத்து தான் நாங்கள் ஏற்பாடு ஆவணம் ஏற்படுத்தியுள்ளோம் என்று சொன்னால் இல்லை. எனது தாயார் செட்டில்மெண்ட் கொடுத்த பின்பு தான் வழக்கு போட்டு இருக்கிறார்கள். செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்து பாகபிரிவினை வழக்கில் உள்ள சொத்து என்று தான் நாங்கள் போட்ட இடைக்கால உறுத்துககட்டளை மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நாங்கள் அந்த உத்தரவிற்கு எதிராக மேலமுறையீடு தாக்கல் செய்து அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்ப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தள்ளுபடி ஆகவில்லை. மேல்முறையீடு தள்ளுபடி ஆகியதாக என்க்கு எந்த தகவலும் வரவில்லை. மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது

என்றும் வழக்கிற்காக நான் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது